# தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

தாட்கோ நிறுவனம் 1974ம் ஆண்டு ஆதிதிராவிடர்கள் குடியிருப்பதற்கான வீடுகளைக் கட்டுவதற்காக நிறுவன சட்டம் 1956-ன் கீழ் பதிவு செய்யப்பட்டு தொடங்கப்பட்டது. பின்னர் 1980ம் ஆண்டு முதல் ஆதிதிராவிடர்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

**செயல்பாடுகள்-**

1. ஆதிதிராவிடர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் – ஆதிதிராவிட மக்களின் தேவைக்கேற்ப பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை வகுத்து தாட்கோ மானியம் மற்றும் வங்கி கடன் உதவியுடன் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மேலாளர் அலுவலகங்கள் மூலம் செயல்படுத்துதல்.
2. தகுதிகேற்ப திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல் – ஆதிதிராவிட இளைஞர்களுக்கு அவர்களின் தகுதிக்கேற்ப பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை இலவசமாக அளித்து வேலை/சுயதொழிலுக்கு தயார்படுத்துதல்.
3. கட்டுமானப் பணிகள் – ஆதிதிராவிட மாணவ மாணவியர்களுக்கு விடுதிகள், பள்ளி கட்டிடங்கள், விஞ்ஞான ஆய்வுக்கூடங்கள் , ஆசிரியர்களுக்கான குடியிருப்புகள் மற்றும் சமூக நலக் கூடங்கள், கிராமங்களில் சில உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற கட்டுமானப் பணிகளைச் செயல்படுத்துதல்.

## பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

### 1. நிலம் வாங்குதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டம்-

இத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் நிலங்களுக்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்தில் 100 சதவீதம் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**தகுதி-**

1. ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த மகளிராக இருக்க வேண்டும்.
2. வயது 18 க்கு மேலும் 55 வயதிற்குள்ளாகவும் இருக்க வேண்டும்.
3. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
4. நிலமற்றவராக இருக்க வேண்டும்.
5. விண்ணப்பதார மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இது வரை மானியம் ஏதுவும் பெற்றிருக்கக் கூடாது.

**நிபந்தனைகள்**

இத்திட்டத்தின் கீழ் நிலம் வாங்கும் போது கீழ்கண்ட நிபந்தனைகளைக் கடைபிடிக்க வேண்டும்.

1. வாங்க உத்தேசித்துள்ள நிலத்தை விண்ணப்பதார ரே தெரிவு செய்து கொள்ள வேண்டும்.
2. நிலம் விற்பனை செய்பவர் ஆதிதிராவிடர் அல்லாத இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
3. இத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் நிலம் விண்ணப்பதார்ரின் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.
4. நிலம் வாங்கும் திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட நிலத்தினை விண்ணப்பதார ர் 20 வருடங்களுக்கு விற்பனை செய்யக் கூடாது.
5. நிலம் மேம்பாடு செய்வதற்கு நிலம் விண்ணப்பதா ரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
6. நிலம் மேம்பாடு செய்வதற்கு அந்தந்த மாவட்டங்களில் நபார்டு வழி காட்டுதலின்படி கிணறு தோண்டுதல், ஆழ்துறை கிணறு தோண்டுதல் மற்றும் மின் இணைப்பு ஆகியவற்றிற்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.
7. ஆழ்துளைக் கிணறு தோண்டுவதற்கு விண்ணப்பதாரரின் நிலத்தில் போதிய நீர் ஆதாரம் உள்ளது என்பதற்கான புவியியல் வல்லுநரின் சான்று பெறப்பட வேண்டும்.
8. விண்ணப்பதாரின் குடும்பத்தினர் கடந் ஐந்து ஆண்டுகளில் சொந்தமாக நிலம் வைத்திருந்து அதனை எவருக்கும் பெயர் மாற்றமோ, விற்பனையோ செய்திருக்க க் கூடாது.

**வாங்கும் நிலத்தின் அளவு**

அதிகபட்சமாக 2.5 ஏக்கர் நஞ்சை நிலம் அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலம் வாங்கலாம்.

**மானிய விபரம்**

திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிக பட்சமாக 30 சதவீதம் அல்லது ரூ 2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். நிலத்தின் மதிப்பு அரசின் வழிகாட்டி மதிப்பீட்டின் படி நிர்ணயிக்கப்படும். இவ்வாறு விடுவிக்க ப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியம் ஆகும்.

## தொழில் முனைவோர் திட்டம்

**தகுதி**

1. ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.
2. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 மிகாமல் இருக்க வேண்டும்.
3. வயது 18க்கு மேலும் 55க்குளாகவும் இருக்க வேண்டும்.
4. கடன் மற்றும் மானியம் கோரும் தொழில் முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.
5. விண்ணபதார ர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் ஏதும் பெற்றிருக்க்கூடாது.

**நிபந்தனைகள்**

1. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் கீழ்கண்ட நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.
2. துவங்க உத்தேசித்துள்ள தொழிலை விண்ணப்தாரரே தெரிவு செய்து கொள்ள வேண்டும்.
3. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்து விண்ணப்பதார்ரின் பெயரில் மட்டமே பதிவு செய்யப்படவேண்டும்.
4. விண்ணப்பதார ர் தொழில் புரிவதற்கான கடன் மற்றும் மானியம் பெறப்பட்ட மாவட்டத்திலேயே தொழில் புரிய வேண்டும்.

**மானிய விவரம்-**

திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிக பட்சமாக 30 சதவீதம் அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியம் ஆகும்.

## இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

### தகுதி

1. ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
2. குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 1.00 லட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. வயது 18க்கு மேலும் 35 வயதுக்குள்ளாகவும் இருக்க வேண்டும்.
4. கடன் மற்றும் மானியம் கோரும் தொழில் முன் அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
5. விண்ணப்பதார ர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் ஏதும் பெற்றிருக்க கூடாது.
6. தாட்கோ மத்திய அல்லது மாநில அரசு அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனங்களில் தகுதிச் சான்று பெற்றிருக்க வேண்டும்.

### நிபந்தனைகள்

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் கீழ் கண்ட நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.

1. துவங்க உத்தேசித்துள்ள தொழிலை விண்ணப்பதார ரே தெரிவு செய்து கொள்ள வேண்டும்.
2. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்து விண்ணப்பதார ரின் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.
3. விண்ணப்பதார ர் தொழில் புரிவதற்காக கடன் மற்றும் மானியம் பெறப்பட்ட மாவட்டதிலே தொழில் புரிய வேண்டும்.

**மானிய விபரம்**

திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிக பட்சம் 30 சதவீதம் அல்லது ரூ 2.25 லட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக ஆகும்.

## மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான சுழல் நிதி / பொருளாதார கடன் உதவித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குழுவிற்கும் சுழல் நிதி மற்றும் பொருளாதாரக் கடன் ஆகியவற்றிற்கான மானியம் ஒரு முறை மட்டுமே வழங்கப்படும்.

**தகுதி**

1. ஆதி திராவிடர் மகளிர் மட்டுமே உள்ள குழுவாக இருக்க வேண்டும்.
2. அனைத்து உறுப்பினர்களுக்கும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 லட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. சுழல் நிதி பெறுவதற்கு குழு தரம் பிரிக்கப்பட்டு அதில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
4. பொருளாதாரக் கடன் பெறுவதற்கு சுழல் நிதி பெற்று இரண்டாவது முறையாக தரம் பிரித்தல் செய்யப்பட்டு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
5. சுய உதவிக்குழு வேறு எந்த அரசுத் திட்டத்திலும் சுழல் நிதி மற்றும் பொருளாதாரக் கடனுக்கான மானியம் பெற்றிருக்க கூடாது.

## சுழல் நிதிக்கான மானியம்

குழு தொடங்கப்பட்டு ஆறு மாதங்களுக்குப் பிறகு தரம் பிரித்தல் செய்யப்பட்டு அதில் தேர்ச்சி பெற்ற பின் வங்கியில் சுழல் நிதி பெறுவதற்காக தாட்கோ மானியம் ரூ.25,000/- விடுவிக்கப்படும்.

## பொருளாதாரக் கடன் உதவிக்கான மானியம்

திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குழுவிற்கும் அதிக பட்சமாக 50 சதவீதம் ரூ.2.50 லட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியம் ஆகும்.

## நல நிதி திட்டம்

**தகுதி-**

1. ஆதிதிராவிடர்களாக இருத்தல் வேண்டும்.
2. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 லட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. எந்த அரசுத் திட்டத்தின் கீழும் மாதாந்திர அடிப்படையில் தொடர்ந்து பணப்ப பயன் பெறாதவர்களாக இருத்தல் வேண்டும்.

**நிதியுதவி**

திட்ட மதிப்பீட்டின் படி விண்ணப்பதார் செய்யும் தொழிலுக்கேற்ப அதிக பட்சமாக ஒரு நபருக்கு மானியம் ரூ.25000/- விடுவிக்கப்படும்.

## துரித மின் இணைப்பு வழங்கும் திட்டம்

**தகுதி**

குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 லட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**நிபந்தனைகள்**

1. நிலம் விண்ணப்பதாருக்கு சொந்தமாக இருப்பதுடன் அவரது பெயரில் நிலம் இருக்க வேண்டும்.
2. மேற்கண்ட நிலத்தில் கிணறு அல்லது ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

**நிதியுதவி**

தகுதியானவர்களுக்கு ரூ.10,000 வைப்புத்தொகையினை தாட்கோ தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் நேரிடியாக செலுத்தும்.